# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : தமிழ் சமூகம்

பகுதி : **நாகரீகமும் பண்பாடும் - தமிழர் தோற்றமும் பரவலும்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# நாகரீகமும் பண்பாடும்

## தமிழர் தோற்றமும் பரவலும்

**அறிமுகம்**

**பண்பாடு மற்றும் நாகரிகம்**

**"பண்பாடு விளக்கம்"**

"பண்பாடு என்பது, சிறந்த வாழ்வியல் கூறுகளின் அடிப்படை; மனித அகப்புற நடத்தைகளின் வெளிப்பாடு" என்கிறார், தெ.பொ.மீ. அவர்கள்.

"நன்கு கட்டமைக்கப்பட்ட சமுதாயத்தை உருவாக்கும் வண்ணம் அமையும் தனிமனிதனின் பண்பு நலன்களே பண்பாடு" என்கிறார் மாத்யூ ஆர்னால்டு.

டி.கே.சி. - "பண்படுத்தப்பட்ட நிலம் நல்ல மகசூலைத் தருவதைப் போல நற்குணங்கள் நிறைந்த மனிதர்களால் சமூகம் பயனடைகிறது".

"பண்பாடு" என்பது ஓரினத்தின் நாகரிகத்தின் நுண்மையளவு. (Micro)

**நாகரிகம்**

Civilisation : Civitas > city > civis > citizen என்பது இலத்தீன் மொழி வழியானது. நகர் > நகரம் > நகரியம் > நாகரிகம் என்ற அடிப்படையில், நகர வாழ்க்கையே நாகரிகத்தின் மூலம் என்பர். ஆறுகளும் அவற்றின் படுகைகளும் மனிதனை உழவியலில் ஈடுபடுத்தின.

யூப்ரடீஸ், டைகிரிஸ், சிந்து-கங்கை, காவிரி, வைகை, பொருநை என ஆற்றங்கரைகளின் வழியே நாகரிகங்கள் வளர்ந்தன. நகரங்களும் நாடுகளும் உருவாக உழவே காரணியாகும். "பண்பாடு வாழ்க்கையின் அகநிலையெனின், நாகரிகம் புறநிலை" என்பார் பேராசிரியர் தட்சிணா மூர்த்தி அவர்கள்.

பண்பாடும் நாகரிகமும் இரு வேறு அன்று; அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். அவைகளது நோக்கிலும் கூறுகளிலும் ஒன்றோடொன்று தொடர்புடையன.

நாகரிகம் என்பது பண்பாட்டின் பேரளவு. (Macro)

**பண்பாடும், நாகரிகமும் :-**

இவ்விரு சொற்களும் மனிதன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெற்று வந்த வளர்ச்சியினைச் சுட்டுவன. அவற்றை அகவளர்ச்சி, புறவளர்ச்சி எனப்பகுக்கலாம். இயற்கைப் படைப்புகளின் மணிமுடியாக விளங்குபவன் மனிதன். தனக்குரிய சிறப்புப் பண்புகளால் மனிதன் பிற உயிரினங்களில் இருந்து வேறுபடுகின்றான். அவனது மனமே அவ்வேறுபாட்டை உருவாக்குகிறது. சமூக விலங்காகிய மனிதன் பிற மனிதர்களுடன் கலந்து வாழும் போது, தன்னலத்தைப் புறக்கணித்துப் பொதுநலம் பேணும் தேவைக்கு ஆளாகின்றான். அன்பு, அருள், நாணம், வாய்மை, ஒப்புரவு, இரக்கம் ஆகிய பண்புகள் அவனை நெறிப்படுத்துகின்றன. இப்பண்புகள் அனைத்தும் இணைந்து மனிதனைப் பொதுவுடமைப்பண்பு உள்ளவனாக மாற்றுகின்றன. இப்பண்புகள் ஓரினம், மொழி, சமயம் சார்ந்தவையல்ல, மனித இனம் முழுமைக்கும் ஒத்துப் போகும் அருங்குணங்களாகும். இப்பண்புத் தொகுதியே, "மானுடப் பண்பு" ஆகும். இப்பண்பே மனிதரின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றுக்கு அடிப்படையாகும்.

மனிதனின் அறிவும் அனுபவமும் மேற்சொன்ன பண்புகளாக மட்டுமின்றிப் பருப்பொருளாகவும் வெளிப்படுகின்றன. உணவு, உடை. இருப்பிடம், இசை, சிற்பம், கட்டடம், ஓவியம் போன்ற பிறபொருள்கள் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சி வெளிப்படுகின்றது. இத்தகைய வளர்ச்சியையே புறவளர்ச்சியென்று அழைக்கிறோம். வாழ்வாங்கு வாழ மனிதன் படைத்துக் கொண்ட புறக்கருவிகள் மனிதனை அவன் வாழ்வை இன்பமயமாக்குதற்குத் துணை செய்கின்றன. பொருளாதார வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய, அமெரிக்கா போன்ற நாடுகள் புறவளர்ச்சியில் முதன்மையுற்று இருப்பினும் அகமாகிய பண்பாட்டில் இந்தியாவுக்கு அடுத்த நிலையில் தான் உள்ளன என விவேகானந்தர் கூறுகிறார். "அமெரிக்காவின் பொருள் வளம்

இந்தியாவுக்கும், இந்தியாவின் ஆன்மீக வளம் அமெரிக்காவுக்கும் அமைய வேண்டும்” என்கிறார்.

**”முந்தை யிருந்து நாட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர்நனி நாகரிகர்” – நற்றிணை, 335**

என்ற கூற்று. பழந்தமிழன் அகப்பண்பையும் புறப்பண்பையும் மிகுதியும் வேறுபடுத்திக் காணவில்லை என்பதைக் காட்டுகிறது. வள்ளுவர் போன்ற பெருமக்கள் அறிவு வளர்ச்சி, கல்வி ஆகியவற்றைவிடப் பண்பு வளர்ச்சிக்கே மிகுந்த முக்கியத்துவம் தருகின்றனர். “மக்கட்பண்பு“ உடையவரையே, வள்ளுவர் சான்றோர், நயனுடையான, பெருந்தகையாள் என்று செல்லப் பெயர்களிட்டு அழைக்கிறார். இவர்கள் தமக்னெ வாழாது பிறர்க்கென வாழ்வோர், பழியெனில் உலகத்துடன் தந்தாலும் ஏற்கமாட்டார்; புகழென்றால் தம் உயிரையே தருவர். அஞ்சுவது அஞ்சி, பேதைமை விலக்கி, மேதைமை ஏற்று, அடக்கமே உருவாய் வாழ்வர், ஆரவாரத்தை விலக்கியிருப்பவர்; தாம் பெற்ற இன்பத்தினைப் பிறரோடு பகிர்வர்.

உலக வரலாற்றில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியான தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் இன்றளவும் சிறந்து நிற்க, அவர்களின் அடிப்படைப் பண்புகளான இல்வாழ்க்கை, விருந்தோம்பல், போர் அறம், காதல்நெறிகள், வறுமையிற் செம்மை, செம்மையில் நேர்மை போன்ற அகக்காரணிகள் விஞ்சி நிற்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## தமிழ் இனம் – தோற்றமும் பரவலும்

எத்தகைய அறிவியல் முறைப்படிப் பார்த்தாலும் ஓரினத்தின் தோற்றம் காண முடியும் என்பது முயற்கொம்பே. குறிப்பாகத் தமிழினத்தின் பிறப்பு அறிவதென்பது மொழியின் தொடக்கம் காண்பதற்குச் சமம். எனினும், புவியியலார், மானுடவியலார், மண்ணியலார் ஆய்வுகளின்படி நாம் சில முடிவுகளை நெருங்கலாம்.

"இந்தியப் பெருங்கடலின் தென்குமரியை ஒட்டி மிகப்பெரும் நிலப்பரப்பு ஒன்று ஆறையும் மலைத்தொடரையும் கொண்டு விளங்கியது" என்பர் புவியியலார்.

"இந்நிலப்பரப்பு மனித வாழ்க்கைக்கு ஏற்றதாக அமைந்தது" என்கிறார் ஜெர்மன் அறிஞர் மனித இனம் தோன்றிய பகுதி இது என்ற முடிவுக்கு வருகிறார் அவர்.

**"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"**

என்ற சிலப்பதிகார அடிகள் காட்டும் பஃறுளியாறும், மலையடுக்கமும் ஆழிப்பேரலையால் கடலுக்கு இரையாயின. கடல் கொண்ட இப்பெரு நிலப்பரப்பே "இலெமூரியா" ஆகும்.

**"இலெமூரியக் கொள்கை":-** "மனிதன் முதலில் தோன்றிய நிலம் இலெமூரியாவே" என்று ஆய்வு செய்த சர்.வால்ட்டர் ராலே, ஹெகல், ஜான் ஈவான்ஸ், ஸ்காட் எலியட் மற்றும் ஹோல்டர்னஸ் ஆகியோர் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றனர்.

தமிழ் வேர்ச்சொற்களின் ஆய்வாளர், பாவாணர் இலெமூரியக் கொள்கைக்கு ஆதரவு தந்தார்.

அமெரிக்க மானுடவியலாளர் அலெக்ஸ் கோலியர் "முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்" என்கிறார்.

இலெமூரியாவில் தோன்றிய இவ்வினமே பின்னர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து கங்கைச் சமவெளியிலும் பரவிப் பின் பிறந்தகம் சேர்ந்தது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றனர் தெ.பொ.மீ., ஹீராஸ் பாதிரியார் போன்ற தமிழறிஞர்கள்.

தமிழினம் தோற்றமும், பரவலும் - ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் தரும் செய்திகள் பெரிதும் இயல்பு நவிற்சியாய் அமைந்தவை, அவை கற்பனைத்திரைகளின் வேக ஓட்டத்தில் விளைந்தன அல்ல. அந்நூல்களின் கூற்றுகள் அண்மைக்காலத் தொல்பொருள்

அகழாய்வுகள் வழி நாளுக்கு நாள் மெருகேற்றப்பட்டு வருகின்றன. அக்காலகட்டத்தைச் சேர்ந்த கிரேக்க – உரோமப் பயணியர்கள், சீனத்துப் பார்வையாளர்கள் தரும் பயணக் குறிப்புகள் ஆகியன தமிழினத்தின் தொன்மையையும் பரவலையும் நம் பார்வைக்கு வைக்கின்றன.

"தமிழின் மிகப்பழைய இலக்கியங்கள் யாவும் மிகப் பழைமையானவை என்றும், தமிழ் நூல்கள் ஆகிய பழையன எல்லாம் கிறித்துவ ஊழியின் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு உரியன" என்கிறார் அறிஞர் வி.ஏ. ஸ்மித். அறிஞர் நீலகண்ட சாஸ்திரியார், "தமிழக வரலாற்றில் முதல் தெளிவான காலம் இன்று நமக்குக் கிடைக்கும் மிகப்பழம்பெரும் நூல்களில் பிரதிபலிக்கிறது" என்கிறார். கிறித்துவ ஊழியின் தொடக்க காலத்தவர்களான தாலமி, பிளைநி, ஸ்டிராபோ, பெரிப்ளுஸின் ஆசிரியர் போன்றோர் கூறும் குறிப்புகள் சங்க நூல்கள் தரும் செய்திகளுடன் ஒத்துப் போகின்றன. சங்ககாலம் பற்றி ஆராய்ந்த அறிஞர் என். சுப்பிரமணியம், "குறைந்தது மௌரியப் பேரரசின் தொடக்க காலமான கி.மு.4 ஆம் நூற்றாண்டு முதல் பல்லவர் ஆட்சியின் தொடக்க காலமான கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை பல நூற்றாண்டுகள் பண்பாட்டுத் தொடர்ச்சியும் தோற்றமும் கால் கொண்டுள்ளன" என்று கூறுவது, தமிழ்ப் பண்பாட்டின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது.

அசோகரின் கல்வெட்டுகளில் காணப்பெறும் சேர, சோழ, பாண்டியர் பற்றிய குறிப்புகள், சிலப்பதிகாரச் செங்குட்டுவன் காலத்தின் சம காலத்தவனான கடல்சூழ் இலங்கைக் கயவாகுவின் வரலாறு ஆகியன தமிழ் இனத் தோற்றம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக் கடந்தது என்பதை அறிவிக்கும். "மூவேந்தர் மரபு" என்பதைச் சுட்டுவதும் அதன் தோற்றம் பற்றிய வரையறையும் விமர்சனங்களும் இராமாயணம், மகாபாரதம், அர்த்த சாத்திரம், அசோகர் காலம் ஆகியனவும் நேரிடைப் பழைமை மிக்கன. இவ்வரசப் பரம்பரையின் தோற்றமும் வளர்ச்சியும் காண்பதென்பது, ஒருவகையில் கல்லிலே நார் உரிப்பதற்குச் சமம் ஆகும். கோ, கோன் என்ற சொற்கள் அரசனைக் குறிப்பன. பசுவிற்குக் "கோ" என்ற ஓரெழுத்தொரு மொழி உண்டு. "கோன்" என்பது பன்மையில் ஆநிரையாகிய பசுக்கூட்டத்தைக் குறிப்பதாகும். அவ்வகையில், பசுக்கூட்டத்தை மேய்க்கும் ஆயர்கள் கையில்

கொண்டிருக்கும் "கோல்" அரசர்கள் கையில் ஏந்திய செங்கோலின் நேர்நிலையாகும். மேய்ச்சல் நில மக்களின் தலைவன் ஆயன், கோன் என்ற சொற்கள் மிகுந்த ஆய்விற்குள்ளானவை. மக்கள் கூட்டத்தை வழிநடத்தும் அரசபரம்பரைத் தோற்றமும் இக்கோவலர் வாழ்வின் தொடக்க நிலையும் ஆராய்ந்து எண்ணத்தக்கவை. குறிஞ்சி, மருதம் போன்ற நிலங்களிலும் இப்படிப்பட்ட தலைமையே உருவாகியிருக்க வேண்டும். வளம்மிக்க ஆற்றுப் பாய்ச்சல் நிலங்களை, மலை நிலத்தவரும், காட்டு நிலத்தவரும் கைப்பற்றிய பின்னர் அங்கும் இவ்வரசமைப்பு தோன்றியிருக்கலாம் என்பது, டாக்டர் சுப்பிரமணியம் அவர்களின் கருத்தாகும்.

**தமிழ் இனப் பரவல்**

"சிந்து – கங்கைச் சமவெளியில் வாழ்ந்த மக்களினம் தமிழினமே" என்ற கொள்கையினை ராபர்ட் கால்டுவெல் வலியுறுத்துகிறார்.

இந்தியாவின் வடக்கிலும் வடமேற்கிலும் வாழ்ந்த மக்கள் திராவிடர்களே; என்கிறார் பேராசிரியர் பர்ரோ.

மொஹஞ்சதாரோ மக்களின் மொழியே, திராவிட மூலமொழி என்பர், ரஷ்ய, பின்லாந்து நாட்டு அறிஞர்கள்.

''சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே", என்பார் ஹீராஸ் பாதிரியார்.

இராமாயணம், மகாபாரதம், இலங்கையின் மகாவம்சம் ஆகியன தமிழர் பற்றிப் பேசுகின்றன.

தாலமி, பிளைநி போன்ற யவனப் பயணிகள் தமிழர் உரோம் நாட்டவரின் வணிகத் தொடர்புகளைப் பேசுகின்றனர்.

கி.மு. 4 ஆம் நூற்றாண்டின் புத்த ஜாதகக் கதைகள் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், தாமிரபரணி, பாண்டியர்கள் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

அஸ்கோ பார்பலோ, ஐராவதம் மகாதேவன் போன்ற ஆய்வறிஞர்கள் திராவிட மொழிகளுக்கும் சிந்துவெளி மொழிக்கும் இடையில் உள்ள ஒப்புமைகளைக் கண்டறிந்துள்ளனர்.

"திராவிட நாகரிகம், மத்தியதரைக்கடல் பகுதிகளுக்குப் பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து பல்வேறு நாகரிகங்களை வளர்த்துள்ளது" என்கிறார் P.T.சீனிவாச ஐயங்கார்.

1876, 2003 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆதிச்சநல்லூர் அகழாய்வு, அது வெளிப்படுத்திய உண்மைகள், புதுச்சேரிக்கு அண்மையில் அரிக்கமேட்டில் ஆய்வில் கிடைத்த உரோம் நாட்டு நாணயங்கள், பொருட்கள் தமிழினத்தின் தொன்மைப் பரவலை உலகிற்கு வெளிச்சமிட்டன.

**சுனீத் குமார் சட்டர்ஜி**

"உலகின் பழமையான நாகரிகம் திராவிட இனத்தில் இருந்தே தோன்றிப் பின்னர் பாபிலோனுக்கும் மெசபடோமியாவிற்கும் பரவியது".

**தமிழினப் பரவல் –** "Man is a social animal" மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற பொன்மொழி மிகுந்த ஆழம் மிக்கது. அம்மனிதனும் ஏன் எவ்வுயிரும் இத்தரையுலகில் தனித்து வாழ இயலாது, முடியாது. இயற்கையின் ஒழுங்கு அமைப்பும், இயற்கைச் சமூக நிலையும், டார்வினின் கூர்தலறக் கோட்பாடும் உணர்த்துவன இக்கருத்தையே ஆகும். கிறித்துப் பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழுரும் உலகின் பல தேகங்களுடனும் தொடர்பில் இருந்து பல்கிப் பரவி வாழும் பன்முகப் வெற்றியைப் பெற்றிருந்தனர். இதற்குத் தமிழனின் பண்பாடும் நாகரிகமும் அடிப்படைக் காரணிகளாக இருந்திருக்கலாம். பண்டைய பெரு நாகரிகங்கள் சிறந்து விளங்கிய தேசங்களில் எல்லாம் தமிழன் தடையின்றித் தொடர்பில் இருந்துள்ளான். அறப்பழங்காலத்திலேயே வளியை வழிக்குக் கொண்டுவந்து வாகை சூடியிருக்கின்றான். மேற்கே கிரீசு, ரோம் முதல் கிழக்கே சீனம் வரையிலும், எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் வரையிலும் தமிழர்கள் வணிகத் தொடர்புகளில் சிறந்து நின்றனர். இவ்வணிகத் தொடர்பே அவரின் "பரவல்" என்ற வாழ்வியலுக்கும்

வகையளித்தது, தமிழன் விளைவித்த மிளகும், இஞ்சியும், இலவங்கமும் மேற்காசிய நாடுகளில் தரம்மிக்க நறுமணப் பொருள்களாக ஏற்கப்பட்டன. யூதர்களின் தலைவர் மோசஸ் தான் நடத்திய வழிபாட்டில் தமிழகத்து ஏலக்காயைப் பயன்படுத்தியுள்ளார்.

தென்னகத்துக்கும் சுமேரியாவுக்கும் இடையே கி.மு.4 ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே வணிகப் பரவல் இருந்துள்ளது. மடகாஸ்கர் – தென்னிந்தியத் தொடர்பு, வணிகத்தினால் ஏற்பட்டது. சொபோக் கிளீஸ், அரிஸ்டோ பேனீஸ் என்னும் அறிஞர்களின் எழுத்துகளில் தமிழ்ச்சொற்கள் பல இடம்பெற்றுள்ளன.

அரிக்கமேடு அகழாய்வு கூறும் செய்திகள் தமிழகம் உரோம நாட்டு வணிகத் தொடர்புகளை மட்டுமன்றி இவ்விரு நாட்டு மக்களும் தம்முள் கலந்து வாழத் தலைப்பட்ட அரிய தகவல்களையும் தருகின்றன.

நைல் நதியின் துறைமுகப் பட்டினமான அலெக்ஸாண்டிரியாவில், நூற்றுக்காணக்கான இந்தியர் குடியேறியிருந்தமையை அறியலாம். பாரசீக வளைகுடாவில் தமிழகத்தின் தேக்கினால் ஆற்றல்சால் கப்பல்களைக் கட்டியுள்ளனர்.

கீழை நாடுகளான சீனத்தவரும், மலேசியாவோடும், சாவகத்தோடும், வட போர்னியாவோடும் தமிழர் பன்னெடுங்காலமாக தொடர்பில் இருந்துள்ளனர். கி.மு. 7ம் நூற்றாண்டிலேயே தமிழகப் பொருட்கள் சீனத்தில் விற்கப்பட்டன.

பட்டினப்பாலையும் மதுரைக் காஞ்சியும் பெரும்பாணாற்றுப் படையும், பாரசீகம், பார்த்தியா, அரேபியா போன்ற நாடுகளில் இருந்து தமிழகத்திற்குத் தருவிக்கப்பட்ட அரபுக் குதிரைகள் பற்றிப் பேசுகின்றன. ஈழத்திற்கும் பாரசீகத்திலிருந்து தான் குதிரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உழவையும் வணிகத்தையும் தம் இருபொருளியல் சித்தாந்தங்களில் முதன்மையாகக் கொண்ட தமிழரின் உலகப்பரவலுக்கு வாணிகமே வகை செய்தது.

**உலகளாவிய தமிழர் – உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள்**

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் 235இல் ஏறக்குறைய 154 நாடுகளில் தமிழர்கள் பரவி வாழ்கின்றனர். பத்துத் தமிழர் முதல் 7½ இலட்சம் தமிழர்கள் வரை அந்நாடுகளில் வசதியாக வாழ்கின்றனர். அவற்றில் இருபது நாடுகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிக்கின்றனர். வணிகம், தொழில், வேலைவாய்ப்பு எனப்பல்வேறு காரணங்களுக்காகச் சென்ற அவர்கள் அந்நாடுகளின் வளர்ச்சியிலும் தங்களை முன்னிறுத்தி வருகின்றனர்.

**பாடமொழி**

சிங்கப்பூர், மலேசியா, பினாங்கு, ரியூனியன் தீவு போன்ற பல நாடுகளில் தமிழர்கள் நிறைந்து உள்ளனர். இலங்கை, மொரிசியஸ், ஃபிஜிதீவுகள், தென்அமெரிக்கா, கனடா, பிரிட்டன், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் 95 விழுக்காட்டுக்கும் மிகையான தமிழ் மாணவர்கள் தமிழைப் பாடமொழியாகப் படிக்கின்றனர்.

**பேராசிரியர்கள்**

அமெரிக்காவில் V.S.இராஜன், ஜார்ஜ் L.ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம் லிண்ட் ஹோம், இந்திரா, நார்மன், A.K.இராமானுஜம் ஆகியோர் தமிழ்ப் பேராசியர்களாகப் பணிபுரிகின்றனர்.

ஜப்பான், சீனா, போலந்து ஆகிய நாடுகளில் பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இந்தியாவின் மதிப்புமிகு பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் பலவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் நூலகம் உலகம் முழுக்கப் பேசப்படும் கல்விக் கூடங்களாகும்.

புதுடில்லியின் "தலைநகர்த் தமிழ்ச்சங்கம்" ஆண்டுதோறும் நடத்தி வரும் கலாச்சார விழாக்கள் பிரபலம்.

அமெரிக்க நாட்டின் நியூயார்க் தமிழ்ச்சங்கம் தமிழ்ப்புத்தாண்டு நாளில் கொண்டாடும் "வாழையிலை விருந்து" புகழ்மிக்க ஒன்று.

சிங்கப்பூர், மொரீஷீயஸ் ஆகிய நாடுகளில் தமிழ்த் தலைவர்கள் நாதன், அனிரூத் ஜெகநாத் ஆகியோர் குடியரசுத் தலைவர்களாக இருந்துள்ளனர்.

இலண்டன், நியூயார்க், கலிபோர்னியா, மாசெசூட்ஸ், பிலிப்பைன்ஸ், சீனாவின் பீஜிங், கொழும்பு, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என உலகெங்கும் தமிழர்கள் பல்கிப் பரவி வாழ்கின்றனர்.

மிகப்பெரும் வடஅமெரிக்க நாடான கனடாவில் தமிழகத் தமிழர்களும், இலங்கையின் புலம் பெயர் தமிழர்களும், ஜெர்மனியின் பிராங்பர்ட் நகரில் ஆயிரக்கணக்கானோரும் சகல வசதிகளுடன் வசித்து வருகின்றனர்.

இலண்டன் பி.பி.சி. வானொலி, தொலைக்காட்சி, சீனாவின் டி.வி., வானொலி மற்றும் இணையத்தில் 24 மணி நேரமும் தமிழ்ச்சேவை வழங்கப்படுகிறது.

போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக தி.சு. சிவசங்கரன், இந்திரா பார்த்தசாரதி போன்றோர் மதிப்புறு பேராசிரியர்களாகப் பணி புரிந்துள்ளனர்.

வளைகுடா நாடுகளில் தமிழகத்து இளையோர் பட்டாளம் இன்னொரு தமிழகத்தை உருவாக்கி வருவது வெள்ளிடை மலை!

**உலகளாவிய தமிழர் :-** தகுதியும் திறமையும் உயர்படிப்பும் அளவிலா ஊக்கமும் உற்சாகமும் உடைய எண்ணற்ற தமிழ்ப் பெருமக்கள் தங்கள் தகுதிமிக்க பெருந்தன்மையாலும் அருங்குணங்களாலும் ஐரோப்பிய, அமெரிக்கா வாழ் அந்நாட்டு மக்களிடையே செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றுப் பாராளுமன்றவாதிகளாக ஆகியுள்ளனர். கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள், உகாண்டா, தான்சானியா, நைஜீரியா போன்ற கறுப்பின மக்களின் தேசங்களிலும் தமிழர்பலர் தொழில் அதிபர்களாக உள்ளனர். இங்கெல்லாம்

தமிழர்கள் வசிக்கிறார்களா என வியக்க வைக்கும் அளவுக்கு விண்ணைத் தாண்டிய நம்பிக்கையுடன் அந்நாடுகளில் பண்பாட்டு விழாக்களையும், தமிழர் தம் பெருமைமிக்க திருவிழாக்களையும் நடத்தி வருகின்றனர். தமிழரின் பரதக்கலை, இசை, நாடகத் துறைகளில் மிளிர்கின்றன. கடல் கடந்து வாழும் தமிழினம் தமிழ்ச்சங்கங்கள் அமைத்துப் பண்பாட்டுப் பகிர்மானம் செய்து வருவது, அன்றாடச் செய்திகளாகி விட்டன.

அமெரிக்காவின் மின்னசோட்டாவில் வாழும் தமிழர்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் தமிழ்ப்புத்தாண்டு நாள், “வாழையிலை விருந்து” பேசப்படும் ஒன்றாகிவிட்டது. அங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றுகூடி விருந்துக்கு ஏற்பாடு செய்து வேப்பம்பூ ரசம், உள்ளிட்ட தமிழக உணவுக்கலையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

அண்மையில் காவிரி டெல்டா மாவட்டங்களைச் சூறையாடிய கஜா புயலால் பாதிக்கப்பட்ட பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற பகுதி வாழ் அயலக இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நிதி திரட்டித் தங்கள் பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்குத் தொகையனுப்பித் தொண்டு செய்தது, உள்ளத்தை நெகிழச் செய்யும் நிகழ்வாகும். மேலும், கடந்த கோடையில் 2019 கடும் வெப்பத்தினால் நீர்நிலைகள் வறண்டுத் தூர்ந்துபோன இடங்களைத் தேர்வு செய்து, தமிழக அயல்நாட்டு இளையோர், தங்கள் குடிமராமத்துப் பணிகளைச் செய்து அசத்தியுள்ளனர்.

இன்றளவும் தமிழக ஏழைச் சிறுவர்-சிறுமியரின் கல்வி, உடல்நலம் உள்ளிட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில், அயலகப் பணியில் ஆழ்ந்த தமிழ் இளைஞர்கள் உறவு என்றும் நட்பென்றும் பாராது சமூக வலைத்தளங்கள் மூலம் நிதிதிரட்டித் தொண்டாற்றும் தொண்டர்களாக விளங்குகின்றனர்.

உலகத் தொழிற் குடும்பங்களில் ஒன்றான டாட்டா குழுமங்களின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அக்குழுமத்தை நிர்வாகம் செய்யும் திரு. சந்திரசேகர், ஒரு தமிழர்.

உலகத் தமிழர் இளைஞர்களின் ரோல் மாடலாக உள்ள திரு. சுந்தர் பிச்சை, கூகுள் சர்வதேசத் தேடுதளத்தின் நிர்வாகியாகத் திறம்படப் பணியாற்றி வருகிறார். இம்மகத்தான இளைஞர் நம் மதுரையின் மைந்தர்.

சென்னைப் பெண்மணியான திருமதி. இந்திரா நூயி பல்லாண்டுகளாகப் பெப்சிகோ நிறுவனத் தலைமை நிர்வாகியாக இருந்து திறம்படப் பணியாற்றி வருகிறார்.

சந்திராயன்-1 திட்ட இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை, திருமதி. வளர்மதி, திரு. அருணன் சுப்பையா ஆகியோர் இஸ்ரோவின் தலைசிறந்த அறிவியலாளர்களாக வலம் வருகின்றனர். முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் அளப்பரிய பணி உலகறிந்த ஒன்று. இஸ்ரோவின் தற்போதைய தலைவர் திரு. K. சிவன், குமரி மண்ணின் மகன்.

டி.சி.எஸ். சி.டி.எஸ். விப்ரோ போன்ற பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்களுக்கு இணையாக HCL மென்பொருள் நிறுவன உரிமையாளராக வலம் வரும் திரு. ஷிவ் நாடார் உலகளாவிய தமிழர்.

கி.மு. நூற்றாண்டுகளில் உலகத் தரைத்தளம் முழுக்கத் தடம் பதித்த தமிழரின் பயணம் இன்றும் தொடர்கிறது, என்றும் தொடரும்.

**<u>வினாக்கள்</u>**

1. தமிழினம் தோற்றமும் பரவலும் குறித்து எழுதுக.
2. உலகளாவிய தமிழர் குறித்து எழுதுக.